
சேவைக்காகவே வாழ்கிறேன்

I LIVE TO SERVE



SWAMI SIVANANDA

சேவைக்காகவே வாழ்கிறேன்

தொகுத்தவர் :

திரு. N. அனந்தநாராயணன்

தமிழாக்கம் :

திரு. S. R. செல்லமுத்து

வெளியிடுவோர்

தெய்வீக வாழ்க்கைச் சங்கம்

சிவானந்தா ஆஸ்ரமம்

சுவாமி சிவானந்தா சாலை,

இராசிபுரம் :: சேலம் மாவட்டம்.

விலை] 1990 [ரூ. 3-00

* O *

Translation of

"I LIVE TO SERVE"

in Tamil

* O *

Printed out of the magnanimous donation of :

SRI R. RAMACHANDRA RAO

Smt. R. VASANTHA KUMARI

Bellary - 583 103.

Printed at The Literary Press, Salem - 636 001.

" முத்தமிழ்ப்பண்ணை "
வைரி செட்டிப்பாளையம்-621012
திருச்சி மாவட்டம்.

சேவைக்காகவே வாழ்கிறேன்

வாக்கு பலித்து விட்டது

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த கலிபோர்னியாவிலிருந்து ''சைம்ஸ்'' என்னும் நேர்த்தியான ஆன்மீக மாதாந்திர வெளியீடு ''அன்பார்ந்த ஜகத் குரு'' என்று 1963 நவம்பர் மாத இதழில் குருதேவர் சுவாமி சிவானந்தருக்குப் புகழ் அஞ்சலி செலுத்தி வர்ணித்த பிறகு மேலும் அவர் மகாசமாதி அடைந்த ஜுலை மாத இதழின் மேல்அட்டையில் நிகழப்போவதை உணர்த்தும் வகையில் அழகிய பாடல் ஒன்று இடம் பெற்றிருந்தது. குறிப்பிட்ட ''சைம்ஸ்'' என்னும் மாத இதழ் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தைச் சார்ந்ததொன்றாகும். அலமாரியினின்று 1963-ஆம் ஆண்டு ஜுலை மாதத்திய பத்திரிக்கையை வெளியில் இழுத்தேன். கழுத்திலே மலர் மாலையுடன் கம்பீரமும் கவர்ச்சியுமிக்க குருதேவரின் திருவுருவப்படத்துடன் சில சொற்களும் அச்சிடப்பட்டிருந்தன.

''நதிகளுக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லை. அவைகளின் தாயகமாகிய கடலோடு கலந்த பின்னரே அவைகள் அமைதி பெறுகின்றன. கடலினின்று நீர் வெப்பத்தால் நீராவியாகமாறி மேகங்களாக உருப்பெறுகின்றன. மலையில் விழும் மழைநீர் நதிகளாகப் பெருக்கெடுத்தோடுகின்றன. ஆகவே, நதிகள் உண்டாவதற்குக் காரணமாக இருப்பது கடலே. அதேபோன்று ஓய்வு ஒழிச்சலில்லா ஜீவன் அல்லது தனிப்பட்ட ஆன்மா அதன் மூலத்தை அடையும்பொழுது அமைதி பெறுகிறது. அதாவது பிரம்மம் அல்லது அழியாப்பொருளாகிறது''.

தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் ஜூலை மாத இதழ் 1963-ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதியன்று வெளிவந்தது. அதே ஆண்டு ஜூலை மாதம் 14-ஆம் தேதியன்று குருதேவர் மகா சமாதி அடைந்தார். ''சைம்ஸ்'' பத்திரிக்கையின் தெய்வீக வாழ்க்கை இதழின் அட்டை மீது காணப்பட்ட வர்ணனை எதிர்கால நிகழ்ச்சியை உணர்த்தியது என்று கூறுவதில் வியப்பொன்றும் இல்லை.

குருதேவர் தம் வாழ்வின் முடிவு பற்றிக் குறிப்புகள் பல காட்டினார். ஆனால் .... பக்தர்களோ அவைகளின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், ஆஸ்ரமத்தில் திறந்தவெளி இரவு சத்சங்கத்தில், ஆரத்தி முடித்தவுடன் பார்க்க வந்த அன்பர் ஒருவர் குருதேவரிடம் பேசிக் கொண்டிருந்தார். அடியேன் அருகில் நின்று கொண்டிருந்தேன். வந்த அன்பர் தான் ஓய்வு பெறப்போவது பற்றி சில வார்த்தைகள் சொன்னார். அதற்குப்பதிலாகக் குருதேவர், ''நான் ஓய்வு பெற்று விட்டேனா? அல்லது ஓய்வு பெறப்போகிறேனா'' என்று வியந்து கூறினார்; அச்சொற்களுக்குப் பல வகைகளில் பொருள் கொள்ளலாம். ஆனால் அவைகள் யாவும் அமங்கலமான சொற்களாகவே என் காதுகளில் விழுந்தன.

1962-ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒரு நாள், காலை சத்சங்கத்திற்குப் பிறகு வைர விழா மண்டபத்தினின்று குருதேவர் வெளிவந்து ஒரு பக்தருடன் புகைப்படமெடுத்துக் கொள்ள அமர்ந்திருந்தார். புகைப்படம் எடுக்கப்பட்டபின் பக்தர் குருதேவருக்கு நன்றி செலுத்திவிட்டு

அவரது அனுமதி பெற்றுச் சென்று விட்டார். அன்றைய தினம் சுற்றிச் சூழ்ந்திருந்த சிலர் தத்தம் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். சிறிது நேரத்திற்குள் தனிமையில் அமர்ந்திருந்த குருதேவர், திடீரென்று அடியேன் பக்கம் திரும்பி "Na Ham... Na Tum... Daftar Gum" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு விட்டார். அது சுவாமிக்குப் பிரியமான வாக்காகும். துரிய நிலையை அடையும் மனிதனுக்கு உலகம் இருப்பதாகவே தோன்ருது என்னும் வேதாந்த உட்கருத்தைப் புகட்டப் பல முறைகளில் பல மக்களுக்குச் சொல்லியுள்ளார். குருதேவரது வாக்கின் உண்மைப் பொருள் யாதெனில் எனக்கோ அல்லது உனக்கோ எவருக்கும் வாழ்வு நிலையில்லாதது. அதற்கேற்ப அந்த அலுவலகம் ஒரேயடியாக மறைந்தே போய்விட்டது.

அன்றைய தினம் கருத்துப்பட உரைத்த வாக்கு இரண்டாம் முறையாக அடியேன் உணர்ந்த நிலையில்லாத் தன்மையும், மகிழ்ச்சியின்மையும் என்னை வாட்டியது. அதைச் சொல்வதற்கும் வியப்பாய் இருக்கிறது.

அதே ஆண்டு செப்டம்பர் எட்டாம் தேதி அவரது பிறந்த தின விழாவின் போது குழுமியிருந்த பக்தர்களை, அடுத்த பிறந்ததின விழாவிற்கு அழைக்க மிகவும் தயக்கங் கொண்டார் (ஒவ்வொரு ஆண்டும் அடுத்த பிறந்ததின விழா விற்கு அழைக்கும் பழக்கத்தைக் கைக்கொண்டவர் குருதேவர்.)

குருதேவர் தெளிவுமிக்க குறிப்பொன்று நமக்காகவே மனதில் தேக்கி வைத்திருந்ததை வெளிப்படுத்திஞர். பக்தர்களுக்குத் தற்போது

நன்கு தெரிந்த ஒன்று. அதாவது 1963-ஆம் ஆண்டில் ஒரு நாள் இரவு சத்சங்கத்தில் குருதேவர் சந்நியாசம் பெற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் அனைவரும் 1963-ஆம் ஆண்டில் வரப்போகும் சிவராத்திரி தினத்தன்றே தீக்ஷை பெற்றுக் கொள்ளுங்கள். அடுத்த சிவராத்திரிக்குள் என்ன நடக்கப் போகிறதென்று யாருக்குத் தெரியும் என்று வாய் மூலம் பக்தர்களுக்கு அழைப்பு விடுத்தார். பக்தர்களில் ஒருவர் சுவாமிஜியைப் பார்த்துத் தங்கள் வாயால் அவ்விதம் சொல்லக் கூடாது என்று சொன்னபொழுது குருதேவர் ''ஓ, தயவு செய்து அமைதியாயிருங்கள், உங்களுக்கு ஒன்றும் தெரியாது'' என்று அவரை வாயடக்கி விட்டார்.

வாரி வழங்கிய வள்ளல் குருதேவர் பொருட் செலவை எப்போது கட்டுப்படுத்தினார்?

மகாசமாதிக்கு முந்திய மூன்று மாதங்களில் மனிதர்களிடத்தும் மற்ற விஷயங்களிலும் தம் போக்கிலே குருதேவர் மிகுந்த கவனம் செலுத்தலானார். அவரது செயல்கள் யாவும் வழக்கத்திற்கு மாறுபட்டவைகளாக இருந்தன.

எடுத்துக்காட்டாக, ஆஸ்ரமத்தின் நிர்வாக அமைப்பைப் பொறுத்த மட்டில், பண விஷயத்தில் சிக்கன முயற்சியைக் கையாண்டார். ஆஸ்ரமத்தில் உழைப்பவர்களது வரம்பு மீறி, அள்ளிக் கொடுத்த அண்ணல் குருதேவர் எவ்வாறு வெட்டுக் கொணர்ந்தார் என்பது நம்மால் புரிந்துகொள்ள முடியாத புதிராக இருந்தது. ஆனால், அவர் அதைச் செய்தார். கிட்டத்தட்ட ஒருமாத காலத்திற்குள் ஆஸ்ரமத்தின் கடன்கள் அனைத்தும் சரிந்து விழும் அளவிற்குக் கண்ணும் கருத்துமாய்

இருந்து ஆஸ்ரமத்தில் ஏற்படும் பெரிய, சிறிய செலவு வகைகளை கணிசமாகக் குறைத்துவிட்டார். குருதேவர் அவைகள் அனைத்தும் விளையாட்டாகவே செய்து முடித்தார். சரக்குகளை வாங்கும் பட்டியலுடன் சுவாமிஜியை அணுகும் அன்பரைப் பார்த்து ''சிக்கனம் ஐயா சிக்கனம்'' என்று சொல்லுவது வழக்கம். அத்தகைய சொல்லுக்கும் செயலுக்கும் அப்பால் ஆழ்ந்த கருத்து ஒன்று உளது என்று அன்று நம்மால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஆஸ்ரமத்தின் பிரியா விடைபெறும் வணக்கத்துக்கு முன், அது சீரான அமைப்பிலே இயங்க வேண்டிப் பெரிதும் பாடுபட்டார் என்பது பின்னோக்கில் தற்போது நமக்குத் தெளிவாக விளங்குகிறது. ஆனால் அந்த வழியில் அப்பொழுது நமக்கு அது புரியவில்லை.

பாத பூஜையிலிருந்து பாதுகா பூஜைக்கு மாறுதல்

1963 ஆம் ஆண்டு முற்பகுதியில் குருதேவர், சுவாமி சாந்தானந்தாஜியை மைசூரிலிருந்து வெள்ளி உறையுடன் கூடிய ஒரு ஜதை மரப் பாதுகைகளை வரவழைக்கும்படி கேட்டுக் கொண்டார். உடனடியாக ஒரு கடிதமும் வரையப்பட்டது. ஆனால், அதற்குப் பதில்வர வில்லை. அவ்விஷயம் மறந்தே போய்விட்டது. ஆனால், இருபது நாட்கள் கழித்துப் பாதுகைகளைப் பற்றி சாந்தானந்தாஜியிடம் கலந்து பேசினார் குருதேவர். மைசூரில் உள்ளவர்களுக்கு மீண்டும் நினைவூட்டினார்; பாதுகைகளும் கிடைத்தன. தேவானந்தஜி என்பவர் அப்பாதுகைகளை அலமாரிக்குள் வைத்தார். அப்பாதுகைகளைப் பற்றி மீண்டும் யாரும் நினைப்பூட்டவில்லை.

சில நாட்களுக்குப் பின் பாத பூஜையின் போது குருதேவர், எதிர்பாராதவிதமாக

தேவானந்தஜியை அப்பாதுகைகளைக் கொண்டு வந்து அவரது திருவடிகளுக்கு அடியில் வைக்கும்படி சொன்னார். அவ்வாறே அவைகள் கொண்டு வரப்பட்டன. குருதேவர், மைசூர் சந்தன மரப்பாதுகைகள் மீது தமது திருப்பாத கமலங்கள் பொருந்திய வண்ணம் வைக்கப்பட்டுப் பாத பூஜை நடந்தேறியது. உடனே பாதபூஜை பாதுகா பூஜையாக வடிவெடுத்தது.

மீண்டும் அடுத்த பாத பூஜையின்போது, சரியாக பூஜையைத் தொடங்கிய சமயம். சுவாமிஜி தேவானந்தஜியைப் பாதுகைகளைக் கொண்டு வரும்படி நினைவு படுத்தினார். அவைகளைக் கொண்டு வந்து அவரது திருவடிக்குக் கீழ் வைக்கப்பட்ட பின்னரே, பாதபூஜையைத் துவக்கும்படி சுவாமிஜி சைகை காட்டினார்.

குருதேவருக்குப் பாத பூஜை நடைபெறும் போதெல்லாம், ஆஸ்ரமத்தில் பணி புரிபவர்களுக்கு ஒரே நிலையாகப் புதிய பாதுகைகளைப் பற்றிய நினைவே இருக்காது. ஆனால், ஒவ்வொரு முறையிலும் குருதேவர் மிக எச்சரிக்கையாக அவைகளைக் கொண்டுவரும்படி நினைவூட்டினார். ஏறக்குறைய 4, 5 தடவைகளில் இவ்வாறு நிகழ்ந்துள்ளது. பாதுகைகளைப் பற்றி ஏன் அத்துணைக் குறிப்பாகக் குருதேவர் இருந்தார்? இப்போது நாம் அதை உணருகிறோம். அப்போது அதனை நாம் அறிந்தோமா?

நம் அனைவர் மீதும் குருதேவர் அளவு கடந்த அன்பு கொண்டதற்கும், நமது ஆன்மீகச் செழிப்பை முன்னிட்டு அவர் கவலை கொண்டதற்கும், இன்று தனிச் சிறப்போடும் மனம் குளிர அவரால் புனித

மாக்கப்பட்ட திருப்பாதுகைகள் நம்மிடையே காட்சியளிப்பதற்கும் நன்றி கலந்த வணக்கங்கள் பல.

காலண்டரைப் பற்றிய நிகழ்ச்சி

இறுதி ஆண்டான 1963-ல் மே, ஜூன் மாதங்களில் பற்பல சமயங்களில் ஒவ்வொரு தடவையும் அவருக்கு அருகில் இருந்து பணிவிடை புரிபவரிடம் காலண்டரைக் கொண்டு வரும்படி கேட்பார். ஒரு முறை தேவானந்தாவும், மற்ெறாரு முறை கல்யாணந்தாவும், இன்ெனாரு முறை சாந்தானந்தாவும் அருகில் இருப்பது வழக்கம். சுவாமி கல்யாணந்தா இம்மாதிரியான சமயம் பார்த்து, ''ஆன்மீகத்தை ஒட்டிய குறிப்புக் காலண்டரா சுவாமிஜி'' எனக் கேட்டார். ''இல்லை, சாதாரண தேதி காட்டும் காலண்டர் இருந்தால் போதும்'' என்றார் சுவாமிஜி. கல்யாணந்தா என்பவர் திகைத்து நின்றார்.

மற்றொரு சமயம், குருதேவர் காலண்டரை வாங்கி ஒரே வீச்சில் அதன் தாள்களை ஜூன் மாதம் முடியப் புரட்டித் தள்ளி விட்டு ஜூலை மாதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். சுவாமி சாந்தானந்தா என்பவர் பெரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார். ''அது என்ன சுவாமிஜி'' என்று கேட்டார். அதற்குக் குருதேவர், ''ஓ அதுவா உனக்குத் தெரியாது'' என்றார். தேதிகளை விரலால் தடவி விட்டு அவரிடம் காலண்டரைத் திருப்பிக் கொடுத்து விட்டார். அதுசமயம், அப்புண்ணிய புருஷர், தமக்குரிய மகா சமாதியின் பொருட்டு மங்களகரமான நாளையும் நட்சத்திரத்தையும் தேர்ந்தெடுத்துக் கொண்டார் என்று யாருக்குத் தெரியும்?

நான் எவ்வளவு கொடுத்தேன்? அது எத்துணைக் காலத்திற்கு வரும்?

1963 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து காலை சத்சங்கத்தினின்று திரும்பி வந்த பின்னர் குருதேவர் தம் குரலை தினசரிப் பதிவு செய்து கொள்ள (Tape Recorded) ஆரம்பித்தார். அவர் உரத்த குரலுடனும், பலத்துடனும், உணர்ச்சியுடனும், சிரமத்தையும் பொருட்படுத்தாது புத்தகங்களினின்றும், டைப் செய்த தாள்களினின்றும் படிப்பார். சாந்தானந்தஜி அவைகளைப் பதிவு செய்து கொள்வார். அவரது அன்றாட அலுவல்களில் ஒன்றான இவ்விஷயத்தில் மிகவும் குறிப்பாக இருந்தார். ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்காது, தவறாது இதனைச் செய்து வந்தார்.

வழக்கப்படி, ஐந்து அல்லது ஆறு நிமிட நேரம் பதிவு செய்து கொள்வதுண்டு. ஒரு நாள் இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் பதிவு செய்வதற்குள் டேப் தீர்ந்து விட்டது. குருதேவருக்கு திருப்தி அளிக்கவில்லை. சுவாமி சாந்தானந்தஜி இதை உணர்ந்தார். "புதிய டேப்பைக் கொண்டு வந்து பொருத்துகிறேன்" என்று அவர் யோசனை கூறினார். அன்றைய தினம், குருதேவர் தன் இருப்பிடம் செல்லும் நேரம் கடந்து விட்ட போதிலும், டேப்பைக் கொண்டு வந்து அதற்கு மேல் சில நிமிடங்கள் வரைப் பதிவு செய்து அன்றைய பங்கினைப் (Quota) பூர்த்தி செய்யப் பத்து நிமிடங்கள் வரை காத்திருந்தார். அதன் பின்னரே குருதேவர் ஆறுதல் அடைந்தார்.

பத்து நாட்களுக்கு ஒரு முறை சுவாமிஜி, "எவ்வளவு செய்தி கொடுத்துள்ளேன்? அது எத்தனை நாட்களுக்கு ஓடும்?" என்று கேட்பார்.

உயிரை உடல் தாங்க முடியாத நிலையை அடைந்த பின்னும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற பேராவல் கொண்டிருந்தார்.

புத்துணர்ச்சியூட்டும் கட்டுரைகள் ஏராளம்

வழக்கத்திற்கு மாருக குருதேவரின் பேரார்வம் பற்பல வழிகளில் மக்களுக்குத் தொண்டு புரிய போக்கிடம் கண்டது. வெளியிடுவதற்காகப் பத்திரிகைகளுக்கும், மாத இதழ்களுக்கும் ஒழுங் காகக் கட்டுரைகளை சுவாமிஜி வழங்கிக்கொண்டு வருவது எல்லோருக்கும் நன்கு தெரிந்ததே. ஆன்மீக ஞானத்தைப் பரப்புவதற்காகவே நிகழ்ச்சி நிரலிலே முக்கியமானதோர் பங்காக இதைச் செய்து கொண்டு வந்தார். அவரது மகா சமாதிக்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே ஏராளமான கட்டுரைகளைச் சம அளவில் ஏராள மான பத்திரிகைகளுக்கு அனுப்பி வந்தார். இறுதி வரைத் தொண்டு! உயர்ந்த அளவில் எத்துணைப் பேர்களுக்கு எத்துணை நன்மை புரிய முடியுமோ அத்துணை அளவு ஆரம்பத்திலிருந்து கடைசி நாள் வரை நிறைவேற்றுவதே புனித குருதேவரின் வாழ்க் கையில் உன்னதக் குறிக்கோளாக இருந்தது.

அறிக்கையும் கண்ணோட்டமும் — குருதேவர் இன்னுமொரு குறிப்பு காட்டுகிருர்

டேப் பதிவு செய்யுங் காலங்களில் பல தடவை களில் குருதேவர் பின்வரும் உணர்ச்சிகளை வெளிப் படுத்தியுள்ளார். ‘‘கண் பார்வை மங்கி வருகிறது, டேப் பதிவு செய்வதில் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவும் இப்போதே எடுத்துக்கொள்ளுங்கள். கேட்கும் சக்தி குறைந்து வருகிறது. என்னென்ன சொல்ல வேண்டுமோ அவற்றையெல்லாம்

இப்பொழுதே சொல்லி விடுங்கள். நாக்கு குழலுகிறது; என்னென்ன கேட்கவேண்டுமோ அவற்றையெல்லாம் இப்பொழுதே கேட்டு விடுங்கள்'' என்றாராம். ஒரு நாள் குருதேவர் தபாலில் கையெழுத்திடும் பொழுது. ''கண் பார்வை மங்குகிறது; இனி என்னால் கையெழுத்துப்போட முடியாது; ஐயா'' என்று வேடிக்கையாகச் சொன்னாராம்.. சுவாமிஜியிடம் தபால்களைக் கொண்டு வரும் சுவாமி, தன்னையும் தான் சொன்னதன் உட்கருத்தையும் புரிந்து கொண்டாரா என்று உறுதிப்படுத்திக் கொள்ள அவரை ஏற இறங்கப் பார்த்தார்.

கடைசி சத்சங்கம்

வைரவிழா மண்டபத்தில் காலை சத்சங்கத்திலே கலந்து கொண்ட 1963 ஆம் ஆண்டு ஜூன் 21-ம் நாளே மெய்ப்பித்து சத்சங்கம் முடிந்ததும் வழக்கம் போல் குருதேவர் வெளியில் வந்து பொருளாளரின் அலுவலகத்தின் வெளிப்புறத்திலுள்ள வேப்ப மரத்தை அணுகியதும், நின்று கொண்டு அவரைப் பின்தொடர்ந்து வரும் பக்தர்கள் கூட்டத்தைச் சுற்றிலும் பார்த்தார். சாந்தாசியைச் சேர்ந்த ஸ்ரீ செமன் லால் (ஓய்வு பெற்ற கல்லூரி முதல்வர்) ஸ்ரீ முராரி லால் (லக்ஷ்மணபுரியிலிருந்து வந்த வழக்கறிஞர்) டாக்டர் தேவகி குட்டி முதலானோர் அக்கூட்டத்திலே இருந்தனர். தனித் தன்மை வாய்ந்த நகைச்சுவையுடன், ''ஓம் பிரம்மலோகத்தினின்று விமானம் வரப்போகிறது; யார் யார் வரப்போகிறீர்கள்? கை தூக்குங்கள்'' என்று குருதேவர் கூறினாராம். ''சுவாமிஜி, நான் உங்களுடன் வருகிறேன்'' என்று முராரிலால்ஜி உடனே சென்னார். டாக்டர் குட்டி பதில் ஒன்றும் சொல்லாது புன்னகை புரிந்தார். சுவாமிஜியும்

சிரித்துக்கொண்டே அவரிடம் ''சிலகாலம் கழித்து வாருங்கள்'' என்றாராம். குருதேவரைப் பொறுத்த மட்டில் சரியாக இருபத்து மூன்று நாட்களுக்குப் பிறகு விண்ணினின்று விமானம் மண்ணிற்கு வரவிருந்தது. குருதேவர் இதை நன்கு உணர்ந்திருந்தார். ஆனால் அப்பாவி பக்தர்கள் இதை உணரவில்லை. குருதேவரின் அன்பிலே அவர்களது எண்ணங்களெல்லாம் தோய்ந்திருந்த காரணத்தால் அவரது சொற்களுக்குப் பொருள் காணும் அளவிற்கு அவர்களுக்கு நேரமில்லாது போயிற்று. அவர்களுடைய குருதேவர் அன்பே உருவான அவர்களுக்கிடையே மன மகிழ்ச்சி யுடனும், முகமலர்ச்சியுடனும் அனைவர் மீதும் அன்பைப் பொழிந்த வண்ணம் நின்ற கோலத்தில் காட்சியளித்துக் கொண்டிருந்தார். பக்தர் களுக்கு அதுவொன்றே மன நிறைவையளித்தது. மற்றவைகளைப் பற்றி அவர்கள் ஒரு போதும் கவலைப்படக் கிடையாது.

''நான் நோய்வாய்ப்படலாம்; ஆனால் தொடர்ந்து பணிபுரிவேன்''

காலை சத்சங்கத்திலிருந்து குடிலுக்குத் திரும்பிய நாளிலேயே இடுப்பிலே வலி உண்டாகத் தொடங்கியது. இரவு சத்சங்கத்திற்குச் செல்ல அவர் பெரிதும் விரும்பினார். ஆனால், அவரால் முடியவில்லை. ......அவருக்குக் கொடுக்கப்பட்டது, மருந்தும் கொடுக்கப்பட்டது.

மறுநாள் (ஜூன் 22) குருதேவர் அலுவலகத் திற்குச் செல்லாதிருந்தும், தபால்கள், இலவசப் புத்தகங்கள் அனுப்புதல், இதர அலுவல்கள் முதலியவற்றை அவரது குடிசையிலேயே கவனிக்க லானார். அதற்கு முந்திய நாளன்று ஆஸ்ரமத்திற்கு

வந்த சுவாமி தேவானந்தஜியின் பெற்றோர்கள், மதிப்பிற்குரிய சுவாமி சிதானந்தஜி ஆகியோரிடம் தாராளமாகப் பேசினார். ஆனால் இரவில் குருதேவர் வலியால் மிகவும் வேதனைப்பட்டார்.

மறுநாளும், தபால்களைக் கவனிக்கவும், அன்றைய நாளின் பங்குப்பணியான ஆன்மீகப் போதனையை டேப் பதிவு செய்வதற்கும் அவரது குடிலின் முற்றத்திற்குக் குருதேவர் வந்தார். சுவாமிஜி சொன்னவற்றை சுவாமி சாந்தானந்தஜி எழுதிக்கொண்டார். ஆனால் வழக்கத்திற்குச் சற்று முன்னரே குருதேவர் சென்று விட்டார். அவரது வலி மேலும் அதிகரித்தது. ஆகவே டாக்டர் O.P. கபூர் என்பவரால் பரிசோதிக்கப்பட்டார்.

புனித குருதேவரின் கடைசிக் குறிப்பு

தினசரி காலை பேனாவுடனும், தாளுடனும் (பேப்பருடனும்) துவக்கும் கடவுள் பிரார்த்தனையே மனிதகுலத்திற்கு ஆற்றும் சேவையின் முக்கியப் பங்காகும். பல ஆண்டுகளாக குருதேவர், இடைவிடாது எழுதிப் பரந்த உலகுடன் தன் பழுத்த அனுபவத்தையும் சீரிய எண்ணங்களையும் பங்கிட்டுக் கொண்டார். தினசரி காலையில் குறித்த நேரத்தில் தன் ஆசனத்தில் அமர்ந்து கொள்வார். பெரும்பாலான ஆண்களுக்கும், பெண்களுக்கும் உண்ணுதல், பருகுதல், உறங்குதல் போன்றவை எப்படி தேவைப்படுகின்றதோ அதே போன்று இது அவருக்குத் தேவைப்பட்டது. தினசரி காலையில் செய்து வந்த குருதேவரின் ஞானவேள்வியின் நேரடியான விளைவேயாகும், உலகிற்கு ஆன்மீக ஆறுதலை அளித்துவரும் பரந்த அளவில் உலவி வரும் சிவானந்தரின் இலக்கியத்திற்குக் காரணம். அவரது மகாசமாதிக்கு முன் இரண்டு மாத

காலமாக இருந்த சீர்கேடான உடல் நிலை குருதேவரைத் தன் கையால் எழுதுவதை நிறுத்தி அதற்குப் பதிலாகப் பிறர் எழுத அவர் சொலும்படி செய்து விட்டது. சுவாமி சாந்தானந்தஜிக்கு குருதேவர் சொல்வதை எழுதிக்கொள்வது வழக்க மாகிவிட்டது.

வழக்கம் போல் ஒரு நாள் சுவாமிஜி சொல்லிக் கொண்டிருந்தார். சில வாக்கியங்களுக்குப் பிறகு "மனிதன் இறைவனிடத்தில் இரண்டறக் கலக்கும் பொழுது பேரின்பம் சுரக்கிறது" (Happiness comes when the individual merges in god) என்று குருதேவர் சொன்னார். அதன் பின்னர் தாமதம் ஏற்பட்டது. சுவாமிஜி இன்னும் சிலவற்றை அதிக மாகச் சொல்லுவார் என்று நினைத்து சாந்தானந்தாஜி காத்திருந்தார். ஆனால், குருதேவர் ஒன்றும் சொல்லவில்லை. சில வினாடிகள் இவ்விதமாகக் கழிந்த பிறகு சாந்தானந்தஜி குருதேவரைப்பார்த்து, "நான் தொடர்ந்து எழுதலாமா" எனக்கேட்டார். அதற்குச் சுவாமிஜி மறைபொருளான தமிழில் "போறும்" என்றார். அதாவது போதும் என்பது அதன் பொருள்.

மனிதன் அவனது விதியையொட்டிய பல்வேறு தலைப்புக்களைக் கொண்டு புத்துணர்ச்சியூட்டும் நூற்றுக்கணக்கான நூல்களுக்கு ஆசிரியரான புனித குருதேவர் சிவானந்தரின் திருவாயினின்று வெளிப் பட்ட இறுதி வாக்கியம், "மனிதன் இறை வனிடத்தில் இரண்டறக் கலக்கும் பொழுது பேரின்பம் சுரக்கிறது" என்பதே. குருதேவர் தனது போதனைகள் அனைத்தும் அந்த ஒரு வாக்கியத்தில் தொகுத்துப் புகுத்தி விட்டார்.

அவர் போதித்தவைகளை விரைவிலேயே செயல் படுத்த வேண்டியிருந்தது. மேலே குறிப்பிடப் பட்டுள்ள வாக்கு வெளி வந்த சில வாரங்களுக்குள் முழுமையாக இறைவனிடத்து ஒன்றிய நிலையை அடையும் வாய்ப்புக் கிட்டியது.

''மனிதன் இறைவனோடு ஐக்கியமாகும் பொழுது பேரின்பம் உண்டாகிறது'' என்னும் வாக்கியம் ''தேவாமிர்தம்'' "Elixir Divine" என்ற புத்தகத்தில் அது இறுதி வாக்கியமாக அமைகிறது. பிறர் எழுதத் தான் சொல்லும் முறையை நிறுத்து வதற்குச் சில வாரங்களுக்கு முன் குருதேவரின் திருவாக்கினால் அருளிய பல நீதி வாக்கியங்கள் அப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. அவை பத்தாயிரக்கணக்கில் அச்சிடப்பட்டு உலகத்தின் தொலைவிலுள்ள மூலை முடுக்குகளில் எல்லாம் இடம் பெற்றுவிட்டன.

குருதேவர் படுத்த படுக்கையில் இருந்த வண்ணம் புத்தகம் ஒன்றைச் சீராட்டிப் பாராட்டுகிறார்

ஜுன் மாதம் 23 ஆம் நாள் ஒரு இரவன்று குருதேவர் குளிக்கும் அறைக்குச் செல்ல விரும்பினார். ஆனால் கிட்டதட்ட ஒரு கால் ஸ்வரனை கெட்ட நிலையில் இருப்பதைக் கண்டார். அந்நிலையிலும் 24 ஆம் தேதி காலை குருதேவர் வெளிமுற்றத்திற்கு வழக்கமாக வரும் நேரத்தில் வந்தார். ஆனால் திட்டமாக அவர் சுகமில்லாது இருந்தார். அவருக்கு இரத்தக் கொதிப்பு அதிகமாக இருந்தது. அவரால் சிரமத்துடன் பேச முடிந்தது. அந் நிலையில் அவர் இன்னும் சிறிதளவாவது பேச்சை டேப் செய்து கொள்ள விரும்பினார். ஆனால் டாக்டரம்மா அவர்கள் அம்முயற்சியினின்று அவரைத் தடுக்க மெதுவாக முனைந்தார்.

ஸ்ரீ குருதேவரின் புனிதம் நிறைந்த முன்னிலையில் ஒரு பக்தரின் குழந்தைக்கு உணவு ஊட்டும் சடங்கிற்கான ஏற்பாடு முன்னதாகவே செய்யப் பட்டிருந்தது. அது சமயம் இனிப்பு நீர் (பானம்) செய்யப்பட்டு முதன் முதலாக புஷ்டியைத் தரும் உண்ணத்தக்க உணவு அளிக்கும் சடங்கு திட்டப்படி நிறைவேறிற்று. குருதேவர் அக்குழந்தைக்கு நல்லாசி கூறினார்.

அச்சடங்கு முடிவுற்றதும், ஆசிரம அச்சகத்தைச் சேர்ந்த சுவாமி தயானந்தஜி, குருதேவரை அணுகி குருதேவரின் ''குண்டலினி யோகா'' என்ற புத்தகத்தின் புதிய பதிப்பின் முதற் பிரதியை அவரிடம் வழங்கினார். குருதேவர் தன் இரு கைகளாலும் அதை வாங்கினார். அதன் அழகுமிக்க அமைப்பைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்தார். புதியதாகப் பிறந்த குழந்தையைத் தாய் சீராட்டிப் பாராட்டுவது போன்று குருதேவர் அப்புத்தகத்தைப் பாராட்டினார். ஆனால் குருதேவர் அதன் பக்கங்களைத் திருப்ப முயன்ற பொழுது அவரது கை நடுங்குவதை அருகிலிருந்தவர்கள் கண்ணாரக் கண்டனர். இக்கட்டான நிலையையும் பொருட் படுத்தாது, இது போன்ற புத்தகத்தை எவரும் எழுதவில்லை என்று சுவாமிஜி அப்புத்தகத்தை மனம் குளிரப் புகழ்ந்து கூறிய பிறகு உணவருந்த உள்ளே சென்றார்.

சிற்றுண்டி அருந்தும் மேஜைக்கருகில் அமர்ந்து கைதுடைக்கும் துண்டைத் தன் இடது கையால் எடுக்க முயன்ற பொழுது அவரால் அதனை எடுக்க முடியவில்லை. உணவுக்குப் பிறகு புனித அன்னை கங்கைக்கு முறைப்படி செலுத்தப்படும் வணக்கங்களும் அவரால் செய்ய முடியவில்லை. அன்றைய நாள் வரை, தினசரி பல தடவைகள்

கங்கைக்குப் பிரணாம் (நமஸ்காரம்) புரியும் பழக்கத்தில் ஈடுபட்டு வந்தார். திறந்த ஜன்னல் வழியாக காலையில் படுக்கையை விட்டு எழும்போதும், படுக்கைக்குப் போகுமுன்னும், மாலை சிற்றுண்டிக்குப் பின்னும் அன்னை கங்கையைத் தொழுதேத்தும் (வணங்கும்) வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். அவருடைய அன்பிற்குப் பாத்திரமான பாகீரதியை கரங்கூப்பி வணங்க முடியாது மானசீகமாகப் பிரார்த்தனை செய்து குருதேவர் மன ஆறுதல் அடைய நேர்ந்தது, துர் அதிர்ஷ்டவசமாகும். குருதேவர் ஜூன் 24ஆம் தேதி இரவு படுக்கைக்குச் சென்றபோது அவரது திருமுகத்தில் செந்நிறம் படர்ந்தது. அவரது அருளொழுகும் கண்கள் வீக்கம் பெற்றன.

குருதேவர் இரட்டை உணர்விலே காட்சியளித்தார்

ஜூன் 25ஆம் நாள் காலை 10½மணி சுமாருக்கு இலக்ஷ்மணபுரியிலிருந்தும், டேராடூனிலிருந்தும் வைத்தியர்கள் வந்து குருதேவரைப் பரிசோதித்தார்கள். சுவாமிஜி பேச முயன்றார். ஆனால், அவரது சொற்கள் தெளிவாக இல்லை. நாக்குழறியது. டேராடூனிலிருந்து வந்த வைத்தியர் குருதேவருக்கு இலேசாக யோசனை கூறினார். "சுவாமிஜி, தாங்கள் எதைப்பற்றியும் கவலை கொள்ளாதீர்கள்; எதைப்பற்றியும் சிந்திக்க வேண்டாம்" என்றார். "ஓ, அது எப்படி முடியும்? நான் பல விஷயங்களைப்பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. நான் எத்தனையோ மக்களின் நலனைப்பற்றி அக்கறை கொள்ள வேண்டியிருக்கிறது" என்று உடனடியாக குருதேவரிடமிருந்து பதில் வந்தது.

ஆட்டு மந்தையைப் பற்றிய கவலை ஆட்டிடையனுக்கு இருப்பது போன்று குருதேவரிடத்தில்

அமைந்துள்ள தனிச் சிறப்பு வாய்ந்த பான்மையை காட்டுகிறது ஒரு முகம். மேம்பாடான தெய்வீக உணர்வுடன் முற்றிலும் மாறுபட்ட சிவானந்தாவாகக் காட்சியளிப்பது மற்ருெரு முகம். ஒரு ஆண்டுக்கு முன்னரே ஒரு சீடரிடத்தில் உரையாடிக் கொண்டிருந்தபோது குருதேவர் சீடரைப் பார்த்து, ''மனமும் எண்ணமும் செல்லாத இடத்தை அவன் அடைந்து விட்டான், என்று குறிப்பாக என்னுல் நினைக்க முடியாது'' என்று மனத்திற் பதியுமாறு குறிப்பிட்டாராம்.

நடுப்பகல் வேளையில், மிக்க அனுபவம் வாய்ந்த வைத்தியர் கர்னல் M. S. ராவ் (இந்திய ஜனுதிபதி டாக்டர் S. இராதாகிருஷ்ணனுக்கு அச்சமயம் சொந்த முறையில் வைத்தியராக இருந்தார்) டெல்லியிலிருந்து ஓடோடியும் வந்து குருதேவரைப் பரிசோதித்தார். ஜனுதிபதி இராதாகிருஷ்ணன் சில மாதங்களுக்கு முன்னர்தான் சுவாமிஜியைப் பார்க்கச் சென்று அவருடன் ஒரு மணி நேரம் இன்பமாகக் காலத்தைக் கழித்தார். அவரும் சுவாமிஜியின் உடல்நிலை குறித்துக் கவலைப்பட்டார். கர்னல் ராவ் சுவாமிஜியை வந்து பார்க்க, டாக்டர் S. இராதாகிருஷ்ணன் அவர்களும் அன்போடும் பெருமையோடும் ஒத்துக்கொண்டார்.

''தாங்கள் எப்படி இருக்கிறீர்கள்? சுவாமிஜி'' என்று கர்னல் ராவ் பரிவுடன் விசாரித்தார். அதற்குக் குருதேவர், ''நான் மிகவும் நல்ல நிலையில் இருக்கிறேன்'' என்று பதிலுரைத்தார். அது சுவாமிஜியின் தனிச் சிறப்பைக் காட்டுகிறது. வருகை தருபவர் குருதேவரை வரவேற்று அவரது உடல் நலம் குறித்து விசாரிக்கும்போதெல்லாம் சுவாமிஜி வித்தியாசமின்றி, ''மிகவும் அற்புதம்'' என்று சொல்வாராம். ஆண்டவனிடத்தில்

அல்லும் பகலும் இடையருது உறவு கொண்டவருக்கு வேறு எவ்விதம் இருக்கும்? அற்புதமாய்த் தானிருக்கும் அன்னுருக்கு! குருதேவர் வைத்தியருடன் எளிதாக உரையாடினுர். வழக்கம்போல் உணவு அருந்தினுர். அவர் உணவு அருந்திக் கொண்டிருந்த பொழுது, டெல்லியைச் சேர்ந்த ஸ்ரீமதி வாணிபாய் ராம் என்பவர் அவரைப்பார்க்க வந்தார். சுவாமிஜி அவரைத் தன் சொந்த பாணியில் ''வாணி சரஸ்வதி, வாக்தேவி, பகவதி, பாரதி மாம் பாஹி'' என்று குதூகலமாக வரவேற்ருர்.

வைத்தியரின் தந்திரத்தைத் தெரிந்து கொள்கிருர்

ஜூன் 25 ஆம் நாள் மாலே குருதேவர் உணவு கொள்ளவில்லே. அதே தேதியில் சுவாமிஜி உருவத்தில் பெரியதான மருந்து சம்பந்தமான மாத்திரைகளே அவரால் எளிதாக விழுங்க முடியவில்லே என்பது தெரிய வந்தது. இக்கஷ்டத்தைத் தவிர்க்கும் பொருட்டு டாகடர் அம்மா அவர்கள் மாத்திரைகளேப் பொடியாக்கித் தேனுடன் குழைத்து மென்மைப் பசையாக்கி குருதேவருக்குக் கொடுத்தார். ''மாத்திரை எங்கே''? என்று சுவாமிஜி கேட்டார். ''மாத்திரைக்குப் பதிலாக, மருந்து கொடுக்கும் முறையை மாற்றி வைத்தியர்கள் பொடியைக் கொடுத்துள்ளனர்'' என்று அவருக்கு எடுத்துரைத்தபோது குருதேவர் தெளிவாகக் கடுமையான முறையில், ''இதுவெல்லாம் வைத்தியரின் தந்திரம்'' என்று பதிலுரைத்தார். மாத்திரைகள் யாவும் பொடியாக்கப்பட்டன என்பதைச் சரியான முறையில் யூகித்தறிந்தார். மேலும் இதற்கு முன் ஒரு வைத்தியராக இருந்ததில்லேயா? அதுவும் சுறுசுறுப்புமிக்க வைத்தியராக!

நம் குழந்தைகள்! நம் குழந்தைகள்!!

ஜூன் 29 ஆம் தேதியிலிருந்து குருதேவர் சுற்றுச் சார்புகளை அறிந்து கொள்வதற்கான தைரிய மூட்டும் அறிகுறிகளைக் காட்டலானார். ஜூன் 30 ஆம் தேதியன்று மாலை 5½ மணியளவில் சுவாமி தேவானந்தஜி என்பவர் குருதேவரின் கட்டிலுக் கருகில் நின்று கொண்டிருந்தார். குருதேவர், தமிழும் தெலுங்கும் சேர்ந்த இன்சுவைக் கலப்பில் (அவரைப் பார்த்து) ''பிட்டலு, எல்லாம் எங்கே?'' (பிள்ளைகளெல்லாம் எங்கே) என்று வினவினார். தேவானந்தஜியால் புரிந்து கொள்ள முடியவில்லை. ''என்ன குழந்தைகள் சுவாமிஜி!'' என்று அவர் வினவினார். ''நம்ம பிட்டலு, நம்ம பிட்டலு'' (நம் குழந்தைகள், நம் குழந்தைகள்) என்று குருதேவர் சொன்னார். அதற்கு தேவானந்த சுவாமிஜி அவருக்கு மிகவும் நெருங்கிப் பணிவிடை புரியும் சீடர்கள் அனைவரும் முற்றத்தின் முன்னால் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்று சொல்லி குருதேவருக்கு ஆறுதல் அளித்தார்.

சீடர்கள் குருவை மறந்து விடலாம்; ஆனால் குரு சீடர்களை ஒருபோதும் மறக்க மாட்டார்.

அவரது உடல் சீர்கெட்டிருந்தது, ஆனால் அவரது உணர்ச்சி மலர்ச்சியுடன் காணப்பட்டது.

ஒரு நாள் சுவாமிஜி உணவு அருந்திக் கொண் டிருந்த பொழுது, டாக்டர் தேவகி குட்டியும், டாக்டர் அத்வார்யூவும் அவரைப் பார்க்க வந்தனர். அவர்கள் பாதியளவு ஸ்வரனை கெட்ட முகத் தோடும் வாயோடும் எந்த அளவிற்குக் குருதேவரால் மென்று உண்ண முடிகிறது என்று குறிப்பாகக் கவனிக்க விரும்பினர். குருதேவர்

நன்கு மென்று உண்பதைக் காட்டாது பரிகாசம் செய்து அவர்களைச் சிரிக்க வைத்து அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினர். அவர் வலது கையால் சிறிதளவு உணவு எடுத்துக் கொண்டு, டாக்டர் தேவகி குட்டியின் தந்தையாரான ராமுண்ணி நாயரின் உடல் நலத்திற்காக இதை அருந்துகிறேன் (அதுசமயம் ராமுண்ணி நாயர் லக்ஷ்மணபுரியில் இருந்தார்) என்று தன் வாய்க்குள் போட்டுக் கொண்டார். அவ்விரண்டு வைத்தியர்களால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. குருதேவரும் புன்னகை புரிந்தார்.

புனித குருபூர்ணிமா தினத்தன்று குருதேவரின் மறை பொருளான போதனை:-

1963 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் தேதி குருபூர்ணிமா தினமாகும். குருதேவர் குடிலுக்குள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. குருதேவரின் அனுபவமிக்க சந்நியாசச் சீடர்கள், ஆசிரம வாசிகள், வருகை தரும் பக்தர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆஸ்ரமத்தின் வெளிப்புறத்திலே புனித தினத்தைப் பயபக்தியுடன் கொண்டாடினர்.

அன்று பிற்பகல் மூன்று மணியளவில் படுக்கையில் ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்குத் திரும்ப குருதேவருக்கு சுவாமி தேவானந்தஜி உதவி புரிந்தார். அவ்வாறு செய்த பொழுது, ''இன்னும் ஏதாவது தேவைப்படுமா ?'' என்று சுவாமிஜியிடம் கேட்டதற்கு 'ஒன்றுமில்லை' என்று சொன்னர். சிறிது நேரங்கழித்து, பகவான் வியாசரின் பிரம்ம சூத்திரங்களினின்று சில அடிகளும், மகரிஷி பதஞ்சலியின் யோக தரிசனத்தினின்று சில அடிகளும் பாடப் பெற்றன.

''தத்து ஸமன்வயாத்''
ப்ரம்ம சூத்ரம் 1–1–4
''தஸ்ய வாசக: ப்ரணவ:''
யோக தர்சனு 1–27
''ஸாது தீர்க்ககால – நைரந்தர்ய
ஸத்கார ஸேவிதோ த்ருட பூமி:''
யோக தர்சனு 1–14

மங்களமும், புனிதமும் மிக்க குருபூர்ணிமா தினத்தன்று கருணைமிக்க குருதேவர் இவ்வாக்குகள் மூலம் அருள் நிறைந்த உபதேசங்களை வழங்கிக் கொண்டிருந்தார் என்பது எளிதான காரியமா? அடியேன் நூல்களைப் படித்துப் பார்த்தேன். அச்சூத்திரங்களின் உண்மைப் பொருள் பின் வருமாறு:—

வேதாந்த நூல்களுக்கெல்லாம் பரம்பொருளே மூலப் பொருளாகிறது. (பிரம்ம சூத்திரம் 1-1-4)

'ஓம்' என்னும் புனிதம் நிறைந்தசொல் ஆண்டவன் ஒருவனையே குறிக்கிறது. (யோக தர்சனம் 1-27)

நெடுங்காலம் சாதனை புரியுமிடத்து அச்சாதனையே ஒழுங்கு பெற்றதாக நிலைத்து விடுகிறது.
(யோக தர்சனம் 1-14)

இதைவிடச் சிறந்த போதனை எவராலும் வழங்க முடியுமா? அதுவும் இச்சுருக்கமான முறையில்? அம்மூன்று சூத்திரங்களிலும், பரம்பொருளே குறிக்கோள், அதை அடைவதற்கு ''ஓம்'' என்ற மந்திரத்தைத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும் என்றும், சிரத்தையோடும் பக்தியோடும், நெடுங்காலம் சாதனை புரிய வேண்டும் என்றும் குருதேவர் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

குருதேவர் நமக்கு இதைச் சொன்னார்; மறைந்து விட்டார். அதன்படி கீழ்ப்படிவதும் சாதனை மூலம் ஆண்டவனை அடைவதும் இனி நமது பொறுப்பாகும்.

தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு சீடரின் நலத்திலும் குருதேவரின் மாருத கவனம்:—

குருதேவரின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்பட்டதும், ஆசிரம அதிகாரிகள் குடிலுக்குள் வருகை தரும் அன்பர்களை அனுமதிப்பதில் தாராளம் காட்டினார். அத்தகைய ஒரு சம்பவத்தன்று தென் நாட்டிலுள்ள மதுரையிலிருந்து வந்த அன்பர் திரு. வானமாமலை மீது குருதேவரின் கவனம் சென்றது. அவரைப்பார்த்ததும், சுவாமிஜி உடனே ''உம்முடைய தங்கையின் திருமணம் என்னவாயிற்று?'' என்று அவரைக் கேட்டார். எண்ணற்ற பக்தர்களின் தனிப்பட்ட சொந்த விவகாரங்களைப் பற்றியும், சுவாமிஜி நன்கு தெரிந்து வைத்திருந்தார். அவரது நெஞ்சிலே தனிமையிடத்திலே இப்பிரச்சனைகளையெல்லாம் தேக்கி வைத்து அவைகளைத் தமதாகவே கருதி உரிமை கொண்டாடி ஒவ்வொருவரது விஷயத்திலும் உதவி புரிந்து வந்துள்ளார். ஆன்மீகத் துறையிலே வழி காட்டியாக விளங்குவதுபோன்று, அவரது நிறைந்த மனிதத் தன்மைக்காகவும் ஆயிரக்கணக்கான மக்கள் அவரைப் பெரிதும் விரும்பினர்.

சேவை செய், அன்பு கொள், தூய்மைப் படுத்து, தியானம் செய், இறையுணர்வு பெறு:—

குருபூர்ணிமா தினத்திலிருந்து குருதேவர் சுற்றுப் புறங்களை அதிகமாக அறிந்து கொள்ள

ஆர்வங் கொண்டார். அமைதி குலைந்த நிலையிலும் அவர் பிறரிடம் மகிழ்ச்சி பொங்கப் பேசினார். அவர் மக்களை அடையாளங் கண்டு கொண்டார். ஆதலால் 8-ஆம் (எட்டாம்) தேதி வெளிமுற்றத் திற்குச் சக்கரம் பொருத்தப்பட்ட நாற்காலியில் குருதேவர் கொண்டுவரப் பட்டார். கங்கையைப் பிரிந்த வண்ணம் இருந்த முற்றத்தின் கதவுகள் திறந்து விடப்பட்டன. மன நிறைவு கொள்ளும் அளவிற்குக் கங்கையைக் கண்டுகளிக்கவும் அதன் அழகு முழுவதையும் பருகவும் குருதேவரால் முடிந்தது. குருதேவருக்கு எப்பொழுதும் கங்கையின் அழகு ஒழுகும் காட்சி கண்ணிற்கும் கருத்திற்கும் விருந்தாய் அமைந்திருந்தது.

பக்தர்கள் அடங்கிய ஒரு சிறு குழு அவரைச் சுற்றிலும் அமைதியுடன் நின்று கொண்டிருந்த பொழுது சுவாமிஜி கிட்டத்தட்ட அரைமணி நேரம் கங்கையைப் பார்த்து ரஸித்த வண்ணம் அமர்ந்திருந்தார். குருதேவரின் உடல் நிலையில் கணிசமான அளவிற்கு முன்னேற்றம் காணப் பட்டது. குருதேவரின் பக்தர்கள் எந்த அளவிற்கு அவரது உறுப்புக்கள் இயங்குகின்றன என்பதைப் பார்க்க விரும்பினர். தாள், மூக்குக் கண்ணாடி, பேனா ஆகியவைகள் கொண்டுவரப்பட்டன. குருதேவர் தெளிவான எழுத்துக்களில் பின்வருமாறு எழுதினார். ''சேவை செய், அன்பு கொள், தியானம் செய், அருளுணர்வு பெறு''. அழியாத் தன்மை பெற்ற எழுத்துக்களையுடைய அத் தாள் குஜராத்தில் உள்ள வீர்நகரைச் சேர்ந்த டாக்டர் அத்வார்யூ என்பவரின் விலைமிக்க சொத்துக்களில் சிறந்த ஒன்றாக மிளர்கிறது.

சகஜ சமாதியில் முனிவரின் திருவுருவம்

நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது, குருதேவரின் நிலை காண்போருக்குப் பரிதாபகரமாக இருந்தது.

அவரது ஒரு கண் மூடப்பட்டிருந்தது. வாய் பக்க வாட்டில் திருகப்பட்டிருந்தது. அவரால் தெளிவாகப் பேச முடியவில்லை. ஒரு கால் முழுவதுமாக உணர்ச்சியற்று இருந்தது. பல நாட்கள் வரை, இரவும், பகலும் ஒரே படுக்கையில் படுத்திருக்கும்படி நேர்ந்தது. படுக்கையில் இருந்த வண்ணம், குடல், மூத்திரக் குண்டிக்காய் ஆகிய வற்றைக் கழுவி சுத்தம் செய்ய வேண்டியிருந்தது. ஒவ்வொரு முறையும் சுவாமிஜிக்குத் தானுகவே மலக்கழிவு ஏற்படும் போதெல்லாம் அவருக்குத் தொல்லையாக இருந்தது. அதிக அளவில் உடல் வேதனையடைந்த போதிலும், ஒரு முறைகூட முணுமுணுப்போ, மனே வேதனையோ கொண்டாரில்லை. அதற்கு முற்றிலும் மாருக ஒவ்வொரு சமயத்திலும், அவருக்குப் பணிவிடை புரிபவர்கள் வெடிச் சிரிப்பு கொள்ளும்வரை எள்ளி நகையாடுவார். அவர் சொன்ன சொல்லிலும், அவர் செய்த செயலிலும் அவரது அகமலர்ச்சியும், மகிழ்ச்சியும் தெளிவாக விளங்கின. பூதவுடலிலிருந்து முற்றிலும் தொடர்பு அறுபட்ட நிலையில் அவர் காணப்பட்டார்.

குருதேவரின் உடலின் நிலையை இரண்டு மணிக் கொருமுறை மாற்ற வேண்டியிருந்தது. சில வேளை களில் அவரது வலப்புறத்திலும், சில சமயங்களில் இடப்புறத்திலும் சாய்ந்து படுக்கும்படி அவர் திருப்பி விடப்பட்டார். சில சமயங்களில் முதுகு புறத்தில் படுத்திருப்பார். ஒவ்வொரு முறையும் இவ்விதமாக அவரது உடலைக் கையாண்டதால் பெருமளவில் அவர் வேதனைப்பட்டிருக்க வேண்டும். ஆனல் வேதனையை அளிக்கும் உடலுக்கு நேர்ந்தது பற்றிச் சுவாமிஜி சொல்லாமல் இருந்ததில்லை. அவரது திருமுகம் துன்ப நிலையை

வெளிப்படுத்தியதுமில்லை. சகஜ சமாதியில் உள்ள முனிவருக்கு இவ்வுடல் மரக்கட்டையாகவே விளங்கியது.

கடைசிமூச்சு உள்ளவரை குருதேவரது நல்லியல்புகளும், உடன்பிறந்த பரிவுணர்வும் நிலைபெற்று இருந்தன

நோயற்ற நிலையிலும், நோயுற்ற நிலையிலும் குருதேவர் ஒரே மாதிரியாக இருந்தார். அவர் நோயுற்றிருந்த காலத்து, அவரது இனிய பண்புகளும் இயற்கையான பாசமும் நேசமும் ஒருபோதும் மாறுதலடைந்ததில்லை. குருதேவரை அணுகியவர் அனைவரும் எப்போதும் இருப்பது போன்றே அளவிலா அன்பை உணர்ந்தனர்.

கடிகாரம் செய்யும் சுவாமி நித்தியானந்தஜி குருதேவரைக் காணச் சென்ற போது அவரைப் பார்த்து ''தாயாரும் வந்துள்ளனரா?'' என்று கேட்டார். நித்தியானந்தஜி ரிஷிகேசம் வரும் போதெல்லாம் தன் தாயையும் உடன் அழைத்து வருவது வழக்கம். அதை குருதேவர் நன்கு நினைவில் வைத்திருந்தார்.

குருதேவரின் அன்புக்குரிய சீடரான பன்னலால்ஜி என்பவர் இரண்டரை வருஷங்கள் கழித்து வந்த பிறகு சுவாமிஜி அதிக அன்புடன் அவரை வரவேற்றார். ''உங்களைப் பார்த்து ரொம்ப நாளாகிறது'' என்றார் குருதேவர். பன்னலால்ஜி பயபக்தியுடன் அடிபணிந்து வணங்கி நின்றார். குருதேவர் அவரைப் பலமுறை தட்டிக்கொடுத்தார். அதிகம் சொல்லப் புகுவோமானால், ''தைரியமாக இரு, அச்சம் தவிர்'' என்று சொல்லியவண்ணம் கண்களில் நீர் பெருக நின்றார்.

சுவாமி மாதவானந்தஜி என்பவரைப் பார்த்து ஒரு நாள் அவரது பாரிச வாதத்தின் வலியைப் பற்றியும், உடல் நிலையைப்பற்றியும் குருதேவர் பரிவுடன் விசாரித்தார். அதே போன்று பம்பாய் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் பத்மா முதால்கருடன் சுவாமிஜி பேசிக் கொண்டிருந்த பொழுது, ''சிவ ஜோதி'' என்னும் தெய்வீக சங்கப் பத்திரிக்கையின் முன்னேற்றம் பற்றி ஆர்வமுடன் விசாரிக்கலானார். சுவாமிஜி எப்பொழுதும் மற்றவர்களின் செழிப்பிலும், மகிழ்ச்சியிலும் மிகுந்த நாட்டங்கொண்டார். அவர் ஒருபோதும் தன் பிணியைப் பற்றிப் பேசியது இல்லை.

மறை பொருளான வாக்கு

ஒருமுறை குருதேவர் தன் படுக்கையில் புரட்டி விடப்பட்டார். குருதேவரின் பருத்ததும் நோய் வாய்ப்பட்டதுமான பூதவுடலை அவ்வாறு புரட்டி விடுவது உண்மையில் அவர்களுக்கு மாபெரும் கடினமான காரியமாகும். சிறிது நேரம் முதுகுப் புறத்திலே படுத்திருந்த பொழுது குருதேவர், ''ஓம் சரவணபவா சிகிச்சைக்கான தைலம் விண்ணினின்று சொட்டுகிறது. ஒவ்வொருவரும் ஒரு புட்டி எடுத்துக்கொள்ளுங்கள்'' என்று உரக்கக் கூவினார். குருதேவர் உணர்வின் உச்ச நிலையில் இருந்த பொழுது மனிதனின் அறிவு யூகிக்கத் தக்க நிலையில் இல்லை. ஆண்டவனின் அன்பு எங்கும் எப்பொழுதும் நிறைந்துள்ளது. ஆகவே நமது விருப்பப்படி அவனது அன்பைப் பருக வேண்டும் என்னும் பொருளிலே குருதேவரின் சொற்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

சுவாமிஜி மிக அமைதியாக நாதஸ்வர வாசிப்பைக் கேட்டு இன்புற்ருர். அக்கலேஞருக்குத் தன் நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்துமாறு அவர் விரும்பினுர்.

சுவாமிஜி நோயுற்றிருந்த பொழுது ஓர் இரவில் பக்கத்து அறையில் வாஞெலிப் பெட்டி மென்மையான இன்னிசையை ஒலித்துக் கொண்டிருந்தது. அன்று (சனி) இரவு புகழ் பெற்ற தென்னகத்து வித்வான் ஒருவர் தேசிய நிகழ்ச்சி நிரலேயொட்டி நாதஸ்வரம் வாசித்துக்கொண்டிருந்தார். குரு தேவருக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தவர்கள் அனேவருக்கும் அவர் உறங்கிக்கொண்டிருந்தாரா அல்லது அரைகுறையான உணர்வில் திளேத்திருந்தாரா என்பது சரிவரத் தெரியாது. ஆனுல் கச்சேரியின் முடிவில் குருதேவர் கண் திறந்து, ''ஓ! நான் நாதஸ்வர வாசிப்பைப் பெரிதும் ரசித்ததாக அக்கலேஞருக்கு எழுதிவிடுங்கள்; அன்ஞருக்கு எனது அன்பார்ந்த வணக்கத்தையும் தெரிவித்துவிடுங்கள்'' என்று சொன்ஞர்.

குருதேவரது சாகாவரம் பெற்ற நூல்கள் ஒன்றின் தலேப்பு ''சங்கீதமும் ஒரு யோகமே'' என்பதாகும்.

குருதேவர் மத்திய சுகாதார அமைச்சரை வரவேற்கிருர்.

குருதேவரின் மகா சமாதிக்கு 4 அல்லது 5 நாட்களுக்கு முன் மத்திய சுகாதார அமைச்சரான சுசீலா நய்யார் குருதேவரைப் பார்க்க வந்தார். உடல் நலம் குன்றியிருந்த நிலேயிலும் குருதேவர் அவருடன் அன்பு கலந்த சொற்களேப் பரிமாறிக் கொண்டார். அவரது உடல் நலத்திற்கும் நல்வாழ்விற்கும் ''மகா மிருத்யுஞ்ஜய'' மந்திரத்தை

உச்சரித்தார். அருளமுத மொழிகளான சேவை செய், அன்பாயிரு, பிறருக்கு வழங்கு, தூய்மை யுடனிரு, தியானம் செய், அருளுணர்வு பெறு ஆகியவற்றை அவருக்கு உபதேசம் செய்தார். அவர் மீது இன்னருளைப் பொழியுமாறு இறைவனை வேண்டி நின்றார். டாக்டர் தாய் ஹிருதயானந்த ஜியை சுகாதார மந்திரிக்குக் குருதேவர் அறிமுகம் செய்து வைத்தார். மாண்பு மிக்க விருந்தினர்க்கு நூல்களும், உணவும் வழங்குமாறு கேட்டுக் கொண்டார். டாக்டர் ஹிருதயானந்தஜியும், டாக்டர் நய்யாரும் ஆஸ்ரமத்தில் உள்ள கண் வைத்தியசாலையைச் சுற்றிப் பார்க்கச் சென்று விட்ட பிறகு, சுகாதார மந்திரிக்கு உப்புமாவும், காபியும் வழங்கப்பட்டனவா என்று சுவாமி தேவானந்தஜியை மீண்டும் விசாரித்துத் தெரிந்து கொண்டார். கடைசியில் தேவானந்தஜியைப் பார்த்து நீங்கள் ஆ கா ர ம் எ டு த் து க் கொண்டீர்களா? என்றும் கேட்டார். அவர் ''ஆம் சுவாமிஜி'' என்று உறுதிமொழி கொடுத்தார்.

நடுப்பகலில், டா க் ட ர் மாதாஜி, குரு தேவருக்குக் கடற்பஞ்சு குளிப்பும், சிற்றுண்டியும் கொடுக்க மீண்டும் வந்தார். அவர் குருதேவரிடம், மத்திய சுகாதார மந்திரி மருத்துவ வசதியுடன் கூடிய வண்டியும் (VAN) உதவித் தொகையும் கண்வைத்திய சாலைக்கு அ ளி க் க வாக்குத் தந்துள்ளார் என்று கூறினார். அவர் சொன்ன வற்றைக் குருதேவர் அமைதியாகக் கேட்டபின், ஒரு தந்தை பெருமித உணர்ச்சி கொள்வதுபோல், ''ஓ அவர் சுசீலா நய்யார், அவர் செல்லம்மா நய்யார்'' என்று அவருக்குப் புகழ் அஞ்சலி செலுத்தினார். மீண்டும் குருதேவர் பிரேமை அல்லது அன்பும் நன்றியும் கலந்த கண்ணீர்த் துளிகளைச் சொரிந்தார்.

புனித கங்கையின் தரிசனம் பெற குருதேவர் அவா :

அவரது மகாசமாதிக்கு 3 அல்லது 4 நாட்களுக்கு முன், தன் படுக்கையில் நோயுற்றிருந்த இடத்திலிருந்தே அன்னை கங்கையைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பத்தைக் குருதேவர் தெரிவித்தார். அது சமயம் அவருக்குப் படுக்கை விரிக்கப்பட்டிருந்த இடத்திற்கும் கங்கை நதிக்கும் இடையே ஒரு சுவர் குறுக்கிட்டிருந்ததால் அதன் தரிசனம் குருதேவருக்குக் கிடைக்காது போயிற்று. குருதேவரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட புனித தீர்த்தத்தைப் பார்ப்பதற்கேற்ற முறையில், அவரது வேண்டுகோளின்படி படுக்கை மாற்றி அமைக்கப்பட்டது. அதன் புனித கரைமீதிலே முப்பது ஆண்டுக்கு மேலாக குருதேவர் வாழ்ந்துள்ளார். 'அன்னை கங்கை' என்ற பெயருடன் அதன் பெருமையைப்பற்றித் தனி நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்.

புனித குருதேவரால் இறுதியாக எழுதப்பட்ட சொற்கள் :

ஜூலை 12ஆம் நாள் சக்கரத்துடன் பொருத்தப்பட்ட நாற்காலியில் முற்றத்தில் சுவாமிஜி அமர்ந்திருந்தபொழுது அவருக்குப் பேனாவும் தாளும் டாக்டர் தேவகி குட்டி அவர்களால் கொடுக்கப்பட்டன. குருதேவர், ''நினைவில் வை, மறந்துவிடு,'' Remember, Forget'' என்று எழுதினார். குருதேவர் எழுதுவதற்கு அட்டையைப் பிடித்திருந்தவர்கள் மேலும் அவர் எழுதுவார் என்ற நினைப்பில் அவ்வட்டையை உயர்த்தினர். ''அதனை தூர எடுத்து விடு, அதுவே போதுமானது'' என்று சொல்வது போன்ற ஜாடை காட்டினார் சுவாமிஜி. பின்னர் அவர் டாக்டர் குட்டியிருக்கும்

பக்கம் திரும்பி, ''நீ தேவி என்பதை நினைவில் வைத்துக்கொள். தேவகி குட்டியல்ல'' என்று சொன்னார். முதலில் எழுத்தால் எழுதப்பட்ட சிறு உபதேசம். அதன் பின்னர் சரிவரப் புரிந்து கொள்ளும் வண்ணம் வாய் மூலம் அந்த உபதேசத்திற்கு விளக்கம். இவ்வாறாக அவரது அன்பு அடுக்கடுக்காகப் பெருகியது.

தாதிக்குப் பட்டுப் புடவை :–

அதே நாளன்று அதாவது ஜூலை 12 ஆம் நாள் டாக்டர் அத்வார்யூ என்பவரால் பாதுகா பூஜை நடந்தேறியது. அது சமயம், அன்பிற்குரிய சிதானந்த சுவாமிஜி மிகுந்த உணர்ச்சியுடன் குரு தோத்திரங்களைப் பாடினார். எல்லோரும் பின்பற்றினர். பூஜை நடைபெற்ற பொழுது, பெரிதும் நேசிக்கப்பட்ட தகுதி வாய்ந்த சீடர்களை விட்டுப் பிரிய வேண்டி வரும் என்ற எண்ணம் குருதேவரின் உள்ளத்தில் உதித்ததோ என்னவோ அவரது கண்களினின்று நீர் பெருகி கன்னத்தின் வழி பாய்ந்தோடியது. பூஜை முடிந்ததும் குருதேவர், டாக்டர் அத்வார்யூ என்பவரிடம் சிதானந்த சுவாமிஜியைச் சுட்டிக் காட்டியபடி, 'இவ்வாண்டில் குஜராத்தில் நடைபெறப்போகும் செப்டம்பர் எட்டாம் நாள் விழாவிற்கு அவருக்கு அழைப்பு விடுங்கள்' என்று கூறினார்.

சிறிது நேரங்கழித்து, சென்ற சில நாட்களாக சுவாமிஜிக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த குமாரி சுந்தரபென் என்பவரால் குருதேவருக்குக் கடற் பஞ்சைக் கொண்டு குளிப்பு அளிக்கப்பட்டது. அன்று வெள்ளிக்கிழமை. குருதேவரது நன்றிக் கடனுக்கறிகுறியாக அவள் ஆற்றிய சேவையை

முன்னிட்டு, அவர் தனிப்பட்ட முறையில் பட்டுப் புடவை ஒன்றை விலைக்கு வாங்கி அவளுக்குப் பரிசாக அளித்தார். சேவை அற்பமாக இருப்பினும் அது பரிசு பெற்றே தீர வேண்டும் என்கிற சீரிய கொள்கை அவரிடத்தே குடிகொண்டிருந்தது.

ஆஸ்ரமத்தில் பணி புரிபவர்களைப் பற்றிய குருதேவரின் கவலை

ஜுலை 12ஆம் நாள் மாலை ஆஸ்ரமத்தில் பணி புரிபவர்கள் குருதேவரின் உடலைப் பிடித்துத் தேய்த்து பிசைந்துவிட்ட பொழுது அவர் நோயுற்ற நாள் முதற்கொண்டு லேசான குறிப்பையும் உணர்ந்து அவருக்கு எத்தகைய பணிவிடையையும் செய்பவர்களில் சிலர், அருகில் நின்று கொண்டிருந்தனர். குருதேவர் அவர்களைக் கண்டதும், டாக்டர் மாதாஜியைப் பார்த்து, ''இங்குள்ளவர்கள் யார்?'' என்று கேட்டார். அதற்கு அவர், ''நீங்கள் அதிவிரைவில் குணமடைய வேண்டி அருகிலிருந்து கொண்டு பணிபுரிபவர்கள்'' என்றார். அவரைச் சூழ்ந்துள்ளவர்கள் தொண்டர்கள் என்று கேள்விப்பட்டதும், குருதேவர் துக்கத்துடனும், அக்கறையுடனும் ''உங்களுக்கு எல்லாம் ஊதியம் கொடுக்க என்னிடத்தில் பணமில்லையே'' என்று வருத்தத்துடன் சொன்னார். 'சுவாமிஜி எங்களுக்கு எல்லாம் கிடைக்கிறது' என்று சொல்லி டாக்டர் மாதாஜி உறுதிப்படுத்த முயன்றார்.

ஊசலாடிக் கொண்டிருக்கும் இறுதிப் பார்வையும் கங்கைக்குப் பிரிவு வணக்கமும்.

ஜுலை 13 ஆம் நாள் குருதேவர் காலை உணவு போதுமான அளவு எடுத்துக் கொள்ளவில்லை.

ஆனால் ஒரு இட்லியும் சிறிது மாம்பழச்சாறு, பால் ஆகியவற்றுடன் அவர் திருப்தியடைந்தார். வழக்கம்போல் 10 மணிக்கு குருதேவர் முற்றத்திற்குக் கொண்டு வரப்பட்டார். சாதாரணமாக அங்கு அரை மணி நேரம் அமர்ந்திருப்பார். ஆனால், அன்று கங்கைமீது அவர் வைத்த கண் வாங்காது பத்து நிமிட நேரம் ஒரே கருத்துடன் அப்படியே இன்பத்திலே திளைத்திருந்தார். அதன் பின்னர் அவர் திடீரென்று சுவாமி சாந்தானந்தஜியைக் கூப்பிட்டு, ''ரொம்ப சரி'' உள்ளே போகலாம் என்றார். அவ்வாறே அவர் உள்ளுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அன்று மாலையே குருதேவருக்குக் கிராணி அல்லது பேதி கண்டது. மூத்திரக் குண்டிக் காய்களும் சரிவர இயங்கின.

நடு இரவு நேரம் குருதேவர் எழுதுகிறார்

குருதேவர் சுகமற்று படுக்கையில் இருந்த காலத்தில் அவரது உடலின் ஒரு புறத்தில் இடையறாத அழுத்தத்தின் காரணமாக படுகிடைப் புண் உண்டாகாமலிருக்க இரண்டு மணிக்கொரு முறை அவரது உடலை ஒரு புறத்திலிருந்து மறு புறத்திற்கு இரவு நேரத்தில் புரட்டி விடுவது அன்றாட அலுவலாகி விட்டது. இரவு 12 மணிக்குப் பிறகு ஒரு மணிக்கிடையில் சுவாமி தேவானந்தஜி கைகடிகாரத்தை எடுத்துப் பார்த்த பொழுது, சுவாமிஜி உறங்காதிருப்பதை அவர் பார்த்தார். ஆனால், அவர் வலது தொடையில் வைத்துத் திரும்பத் திரும்ப 'ஓம்' என்று எழுதிய வண்ணம் இருந்தார். சிறிதுநேரம் அமைதியாக இருப்பது, மீண்டும் அதே முறையில் எழுத ஆரம்பிப்பது,

இவ்வாருக குருதேவர் இருந்தார். காற்றின் போக்கு வரவு வசதி இருந்ததுடன் இரண்டு மின் விசிறிகளும் அவ்வறையில் இயங்கிக் கொண்டிருந்தன. குருதேவரின் உடம்பு வெளிக்காற்ருல் பாதிக்கப்பட்டு விட்டால் என்ன செய்வது என்ற கவலை கொண்டார் தேவானந்தஜி. ஆகவே குருதேவர் எழுதாத சமயத்தில் அவரது கையைத் துணியால் தேவானந்தஜி மூடினுர். ஆனுல் குருதேவர் உடனே துணியை விலக்கிவிட்டு மறுபடியும் எழுத முற்பட்டார். அவர் எழுதுவதை நிறுத்தும் போது தேவானந்தஜி மீண்டும் கையைத் துணியால் மூடுவார். குருதேவர் துணியை விலக்கி விட்டு 'ஓம்' என்று எழுதத் தொடங்குவார். இவ்வாருகப் பன்னிரண்டு தடவைகள் குருதேவரின் கை மூடப்பட்டது. பன்னிரண்டு தடவைகளிலும் குருதேவர் துணியைத் தூக்கி எறிந்து விட்டார். அன்று இரவு 2 மணிக்குப் பிறகு புனித குருதேவர் சிறிது நேரம் கண்ணயர்ந்தார்.

அரை குறை உணர்வு நிலையா ? அல்லது நிறை உணர்வு நிலையா ?

மகாசமாதிக்கு முந்திய நாளான 1963 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் நாள் குருதேவர் பேசும் நிலையில் காணப்பட்டார். டாக்டர் மாதாஜி அவருடன் உரையாடுவதற்குத் துணிந்து, ''சுவாமிஜி சென்ற 4 அல்லது 5 நாட்களாக நீங்கள் முழுக்க முழுக்க உணர்வற்றிருந்தீர்கள் அல்லவா?'' எனக்கேட்டார். அதற்குக் குருதேவர் வெறுமனே தலையசைத்தார். பிறகு டாக்டர் மாதாஜி நான்கு அல்லது ஐந்து நாட்களாக அரைகுறையாக உணர்வற்றிருந்தீர்கள் என்று சொன்னுர். மீண்டும் குருதேவர் ஹும் என்று சொல்வது போன்று தலையசைத்தார். பின்னர் இறுதியாக சுவாமி

ஹிருதயானந்தஜி, 'சுவாமிஜி, சுகமில்லாது படுக்கையில் எத்தனை நாட்களாக இருந்து வருகிறீர்கள் என்பது சுவாமிஜிக்குத் தெரியுமா?'' எனக் கேட்டார். உடனே குருதேவர் ''இருபது நாட்களாக'' எனப் பதிலுரைத்தார். டாக்டர் மாதாஜியும் ஹிருதயானந்தஜியுடன் இருந்த மற்றவர்களும் குருதேவர் சரியாகச் சொன்னதைக் கேள்வியுற்று ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். முழுவதும் உணர்வற்ற நிலையிலோ அல்லது அரைகுறையான உணர்வு நிலையிலோ படுத்த படுக்கையில் இருக்கும் ஒருவர் எவ்வாறு சரியாக நாட்களைக் கணக்கிட்டுக் கூறமுடியும் என்று வியந்தனர். மீண்டும் குருதேவர், மனித அறிவிற்கும் ஆற்றலுக்கும் அப்பாலுக்கப் பாலாய் இருந்த நிலையை மெய்ப்பித்து விட்டார்.

எல்லா மருத்துவர்களையும்விட குருதேவர் தமது நிலையை நன்கு உணர்ந்திருந்தார்.

ஜூலை 13 ஆம் நாள் இரண்டு அல்லது மூன்று முறை பேதி கண்டதும் குருதேவர் பலவீனமாகக் காணப்பட்டார். டாக்டர் மாதாஜி குருதேவரைப் பார்த்து, ''எப்படி உணருகிறீர்கள்'' எனக் கேட்டார். அதற்குக் குருதேவர், ''நேர்மாறாக'' என்றார். நேர்மார் 'Anti, Anti' என்றால் என்ன சுவாமிஜி? எனக் கலக்கமடைந்த டாக்டர் ஹிருதயானந்தஜி கேட்க குருதேவர் அதற்கு ''எதிரிடையாக உளது'' என்றார்.

"போதும், போதும்."

ஜூலை 13-ஆம் தேதி சனிக்கிழமை இரவு ஒன்பது மணிக்குக் குருதேவருக்கு மின்சக்தி மூலம் உடல் அமுக்கி விடப்பட்டது. யந்திரம் இயங்கும் போது கத்துவது போன்ற ஒலி கேட்டது.

அதற்குக் குருதேவர், ''அதோ பாருங்கள். தவளை கத்துகிறது'' என்று குறிப்புரையாகச் சொன்னார். அவரைச் சூழ்ந்துள்ள மக்கள் அவரது உடல்நிலை குறித்துக் கவலை கொண்டனர். ஆதலால் குருதேவர் ஹாஸ்யமாகச் சொன்ன சொல் அவர்களுக்கு சிரிப்பை உண்டாக்கவில்லை.

குருதேவரின் நெருங்கிய சீடர் ஒருவர் அங்கு வந்தார். அச்சமயத்தில் அவர், மேல் சட்டை ஒன்றும் அணிந்து கொள்ளாது இருந்தார். அவர் தொந்தியும் தொப்பையுமாக எதிரே நின்று காட்சி கொடுத்ததைக் கண்ட குருதேவர், ''ஓ, அவர் வந்து விட்டார். இந்த யந்திரத்தை அவரது தொப்பை மீது நிறுத்துங்கள்'' என்று வேடிக்கை யாகச் சொன்னார்.

மருத்துவர்கள் குருதேவரது முகத்திற்கு மின்சக்தி அழுக்கம் கொடுக்கத் துவங்கியபோது குருதேவரின் உடல்நிலை கவலையளிப்பதாக இருந்தது. அவர் களைப்புடன் காணப்பட்ட போதிலும், ''போதும், போதும்'' என்றார். அச்சமயத்தில் குருதேவர் சொன்ன அச்சொல் வெறுப்புணர்ச்சியைக் காட்டியது. அவர் எதனையும் விரும்பவில்லை. விண்ணகத்தினின்று அழைப்பு வந்த பின்னர் மண்ணகத்து மருத்து வர்கள் ஒன்று கூடிய போதிலும் அவர்களால் யாது செய்ய இயலும்?

எல்லாம் முடிந்து விட்டது. ஆதலால் அமைதி பெறுகிறேன்

ஜூலை 13-ஆம் நாள் சனி இரவு குருதேவர் மகா சமாதியடைய 24 மணி நேரத்திற்குக் குறைவாகவே இருந்தது. குருதேவருக்கு

ஏற்கனவே 8 அல்லது 9 முறை பேதி கண்டது. தங்கு தடையின்றிச் சிறு நீரும் கழித்தார். அவரது வயிறு காலியாக இருந்தது. அவர் முழுக்க முழுக்க ஓய்வில் காணப்பட்டார். தனது வலது கையின் விரல்களால் தலையணையைத் தட்டிக் கொண்டு ஒரு குழந்தையைப் போன்று குருதேவர் படுத்திருப்பதை தேவானந்தஜி கண்டார். சில சமயம் தன் வலது உள்ளங்கையை வயிற்றின் மீது வைத்து லேசாக வட்டமாக வருடினார். அவர் ஆற்ற வேண்டிய பணி இனி ஒன்றுமில்லை. அவரது பெரும் பங்குப் பணி முடிவடைந்து விட்டது.

இறுதி வரை அன்பு, பாசம், பரிவு

ஜூலை 14 ஆம் நாள் காலை 3-30 மணியளவில் பிரம்ம முகூர்த்த நேரம், குருதேவருக்கு விக்கல் தோன்றியது. தன் அலுவலில் ஈடுபட்டு குருதேவருக்குப்பின் அமர்ந்திருந்த சுவாமி கல்யாணனந்தஜி என்பவர் அருகில் சென்று, ''சுவாமிஜி தாங்கள் பருகுவதற்கு அடியேன் நீர் கொண்டு வரலாமா?'' என்று மிகப் பணிவாகக் கேட்டார். அதற்குக் குருதேவர் ''இப்போது அவசியமில்லை, பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று சொல்லிவிட்டார். கல்யாண் சுவாமிஜியிடம் குருதேவர் உரையாட ஆரம்பித்தார். ஒரு சிறு உரையாடல் நிகழ்ந்தது.

குருதேவர் :— உன்னைத் தவிர்த்து எத்தனை பேர் சூழ்ந்துள்ளனர்?

சுவாமி கல்யாண் :— ஒருவருமில்லை சுவாமிஜி.

குருதேவர் :— எத்தனை ஆசனங்கள் உனக்குத் தெரியும்?

சுவாமி கல்யாண் :— 18 (பதினெட்டு) சுவாமிஜி.

குருதேவர் :- 80 (எண்பது) அல்லவே.

சுவாமி கல்யாண் :- இல்லை சுவாமிஜி.

குருதேவர் :- மற்றவர்களெல்லாம் எங்கே?

சுவாமி கல்யாண் :- அவர்கள் எல்லோரும் முற்றத்தில் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள் சுவாமிஜி

குருதேவர் :- அவர்களெல்லாம் யார்? யார்?

சுவாமி கல்யாண் :- அவர்களின் பெயர்களைச் சொல்லட்டுமா சுவாமிஜி? (குருதேவர் தலையசைத்தார்)

கல்யாண் சுவாமிஜி அவர்களின் பெயர்களைச் சொன்னார். டாக்டர் மாதாஜி, சாந்தானந்தாஜி, சத்திய ஞானம் சுவாமி, நாராயண சுவாமி, தேவானந்தாஜி, கோபால கிருஷ்ணன்ஜி, பீம்சென்ஜி முதலானோர் முற்றத்தில் இருந்தனர். குருதேவர் கவனத்துடன் கேட்டு விட்டு, ''நீங்கள் அனைவரும் எங்கு உணவு எடுத்துக்கொள்கிறீர்கள்?'' என்று விசாரித்தார். அதற்குப் பதில் லங்கரில் சுவாமிஜி' என்றார். 'இங்கு இல்லையா' என்று குருதேவர் கேட்டார். அதற்கு அவர் 'இங்கு இல்லை சுவாமிஜி' என்றார். அவரது இறுதி கட்டத்திலும்கூட, ஆஸ்ரம வாசிகளைப் பற்றிய கவலை அவரைப் பற்றி நின்றதால் குழந்தைஉள்ளம் படைத்த சுவாமி சிவானந்தர் ''நீங்கள் அனைவரும் உணவிற்கு என்ன செய்வீர்கள்?'' எனக் கேட்டார். சுவாமி கல்யாணனந்தஜி, ''லங்கர் வழக்கம்போல் பணி புரிந்து வருகிறது சுவாமிஜி. எப்போதும் போல் மணி அடிக்கிறது. எல்லோரும் உணவு கொள்கின்றனர்'' என்று குருதேவருக்கு உறுதிப் படுத்தினர். குருதேவர் மன நிறைவு கொண்டார்.

புனித குருதேவரின் மகா சமாதிக்குப் பிறகும் லங்கரின் மணி இன்னும் சிவானந்தாஸ்ரமத்தில் எப்போதும்போல் தினசரி இருமுறை அடிக்கிறது. எல்லோரும் உணவு கொள்கின்றனர்.

தன்னிகரில்லாத் தவவேந்தன் மனநிறைவு கொள்ளும்பொழுது எல்லாம் சரிவர நடைபெறும். எதுவும் நிலைமாறிப் போகாது.

நான் செய்ய வேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன என்றார். ஆதலால் இன்னும் குருதேவர் நம்மிடையே வாழ்கிறார்

ஜூலை 14ஆம் தேதி கர்னல் பூரி சுவாமிஜியைப் பரிசோதிக்க வந்தார். கோளாறுகளை சோதித்துப் பார்க்க ஒரு கோலைக்கொண்டு குருதேவரைத் தட்டிக்கொண்டிருந்தபொழுது சுவாமிஜி, 'மருத்துவர்கள் மனமிரக்கமில்லாதவர்கள்' என்று அவரைச் சொன்னார். "ஆமாம் சுவாமிஜி, 'அதற்கென்ன செய்வது? அது எங்களது கடமை ஆயிற்றே' என்று டாக்டர் சொல்லிவிட்டு மீண்டும் "சுவாமிஜி அதிவிரைவில் நீங்கள் குணமடைந்து விடுவீர்கள்" என்றார். அதற்குக் குருதேவர், "ஆம் நான் குணமடையத்தான் வேண்டும். நான் செய்ய வேண்டிய காரியங்கள் பல உள" என்றார். அவர் உரைத்த அச்சொற்களில் மக்களுக்குப் பணி புரிய மட்டற்ற ஆசையும், அவருடன் பிறந்த நம்பிக்கையுடன் கூடிய மனோவலிமையும் மிளிர்ந்தன. மேற்கண்ட குறிப்புரையைக் கேட்டவுடன் கர்னல்பூரி சுவாமிஜியிடம், "நீங்கள்

சேவை செய்வீர்கள், சுவாமிஜி ஆனால் கஷ்டத்துடன்'' என்றார். குருதேவர் டாக்டர் சொன்னவற்றைத் தெளிவாகக் கேட்டார். பின்னர் அவரை விறைக்கப் பார்த்தார். குரு தேவரை நன்குப் புரிந்து கொண்டவர்கள், பிணிக்கும், அழிவிற்கும் கட்டுப்பட்டுள்ள பூதவுடலாகிய தளையை அல்லது சிறையை, ஊழ்வினை சூழும் நேரத்திலே விட்டொழிக்கத் தீர்மானித்திருக்க வேண்டும் என்று கூறுவர். நடப்பது நடக்கட்டும். விருந்தினரை முகமலர்ச்சி யுடன் வரவேற்று உபசரிக்கும் பண்புக் கேற்ப டாக்டருக்கு உப்புமாவும் காபியும், நூல்களும் வழங்கப்படுவதை குருதேவர் கண்ணுரக் கண்டார். ''ஓம் நமோ நாராயணாய'' என்ற சக்தி வாய்ந்த மந்திரத்துடன் அவருக்கு இனிமை நிறைந்த பிரிவு வணக்கம் செலுத்தி அவரை வழியனுப்பினார்.

எனது கடைசி பானத்தை எனக்குக் கொடுங்கள்.
அன்னை கங்கையிடம் அழியாப் பேரன்பு.

ஜூலை 14 ஆம் தேதி கர்னல் பூரி அவ்விடத்தை விட்டகன்ற பின்பு அவரது இல்லத்தில் சொந்த உணவு எடுத்துக்கொள்வதற்கு முன்பு குருதேவருக்குத் திடீரென்று குளிர் வந்தது. காய்ச்சலும் கூடவே வந்துவிட்டது. மூச்சு விடுவது கடினமாக இருந்தது. இரண்டு அல்லது மூன்று தேக்கரண்டி அளவு ஹார்லிக்ஸ் பிற்பகலில் எடுத்துக் கொண்டார். பருக கொஞ்சம் தண்ணீரும் கேட்டார். வழக்கமான சாதனைப்படி

குருதேவருக்குப் பணிவிடை புரிந்து கொண்டிருந்த வர்கள் பார்லி தண்ணீரையோ அல்லது ஜீரா தண்ணீரையோ அவருக்குக் கொடுக்க விரும்பினர். ஆனல் இத்தடவை குருதேவர் தூய்மையும், எளிமையும் வாய்ந்த கங்கை நீரையே விரும்பினுர். புனிதமான கங்கா தீர்த்தம் கொண்டுவரப்பட்டது. திடப் பொருளேயோ அல்லது திரவப் பொருளேயோ உட்கொள்வதற்குச் சிரமப்பட்ட குருதேவர், கண்ணுடி டம்ளரில் பாதியளவு கங்கை நீரை எவ்விதத் தொல்லேயுமின்றி விழுங்கி விட்டார். குருதேவர் நீரைப் பருகுவதற்கு முன்னமேயே சிறுநீரும், மலமும் வருவது நின்றுவிட்டன. அன்போடும், பக்தியோடும் புனித கங்கை நீரைப் பருகுவதற்கு முன்பே தன் இச்சைக்குட்பட்ட வயிற்றுப்போக்கின் மூலம் கழிவுப் பொருள்களே உடைய உடற் சிறையைக் குருதேவர் சுத்தமாக்கி விட்டார் என்பது நடைமுறையில் அவருக்குச் சாத்யமானதே. முனிவர்களுக்கும், தவயோகி களுக்கும் எதுதான் முடியாத காரியம்!

"முத்தமிழ்ப்பண்ணை"
வைரி செட்டிப்பாளையம்-621012.
திருச்சி மாவட்டம்.